**செய்தி வெளியீடு எண் : 600** **நாள்: 13.04.2022**

**மாண்புமிகு மாநகராட்சி மேயர்கள், துணை மேயர்கள், நகராட்சி தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்களுக்கான நிர்வாகப் பயிற்சி முகாம் நிறைவு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை – 13.4.2022**

**மாநகராட்சி மேயர்கள், துணை மேயர்கள், நகராட்சித் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவருக்கான நிர்வாக பயிற்சி முகாம் நிறைவு விழா நிகழ்ச்சியினுடைய தலைவர் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களே!**

**நிகழ்ச்சிக்கு முன்னிலை ஏற்று சிறப்புரை ஆற்றி இருக்கக்கூடிய தலைமைச் செயலாளர் முனைவர் இறையன்பு, இ.ஆ.ப., அவர்களே!**

**இங்கு உரையாற்றி அமர்ந்திருக்கக்கூடிய சேப்பாக்கம், திருவல்லிக்கேணி சட்ட மன்ற உறுப்பினர் தம்பி உதயநிதி ஸ்டாலின் அவர்களே!**

**தன்னுடைய அனுபவங்களை உங்களுக்கு எடுத்துச் சொல்லி, உரையாற்றி, உங்களை பயிற்றுவித்திருக்கக்கூடிய மாநிலங்களவை உறுப்பினர் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புச் செயலாளர் திரு.ஆர்.எஸ்.பாரதி அவர்களே!**

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையினுடைய கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. சிவ்தாஸ்மீனா, இ.ஆ.ப., அவர்களே!**

**மற்றும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு மாநகராட்சி மேயர்களே! துணை மேயர்களே! நகராட்சித் தலைவர்களே! துணைத் தலைவர்களே!**

**நிறைவாக நன்றியுரை ஆற்ற இருக்கக்கூடிய நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு.பொன்னையா, இ.ஆ.ப., அவர்களே!**

**அரசு உயர் அதிகாரிகளே! அலுவலகப் பெருமக்களே!**

**பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய பாசமிகு நண்பர்களே!**

**உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!**

மேயர்கள், துணை மேயர்கள், நகர்மன்றத் தலைவர்கள், நகர்மன்றத் துணைத் தலைவர்கள் ஆகியோருக்கான பயிற்சி நிறைவு விழாவில் கலந்துகொண்டு உங்களை எல்லாம் ஒரே இடத்தில் சந்திக்கும் வாய்ப்பை பெற்றமைக்கு மகிழ்ச்சி அடைகிறேன்.

உள்ளாட்சி அமைப்புகளும் - அதன் பிரதிநிதிகளாகிய நீங்களும்தான் மக்களாட்சித் தத்துவத்தின் மகத்தான நம்பிக்கைகளாக இருக்கிறீர்கள்!

நீங்கள் முறையாக, செயல்பட்டீர்கள் என்றால், மக்களாட்சித் தத்துவம் மகத்தான வளர்ச்சியை பெற்றிட முடியும்!

எனவே, நான் உங்களுக்கு முதலில் சொல்லிக் கொள்ள விரும்புவது

மக்களோடு இருங்கள்.

மக்களுக்காக இருங்கள் என்பதுதான்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி மக்கள் பிரதிநிதிகள் யாராக இருந்தாலும், அது எம்.பி.யாக இருந்தாலும், எம்எல்ஏவாக இருந்தாலும், மேயராக இருந்தாலும், கவுன்சிலராக இருந்தாலும், எந்த பிரநிதிகளாக இருந்தாலும், மக்களோடு மக்களாக இருக்க வேண்டும் என்று தொடர்ந்து அவர் வலியுறுத்தியது உண்டு.

எனவே, மக்களோடு இருந்தால் - மக்களுக்காக இருந்தால் – ’உங்களது பணியை மிகச்சிறப்பாகச் செய்தீர்கள்!’ என்ற பாராட்டை அது உங்களுக்கு நிச்சயமாகப் பெற்றுத்தரும்.

உங்களுக்கு கிடைத்திருக்கிற இந்த வாய்ப்பு, எல்லோருக்கும் கிடைக்காத வாய்ப்பு!

எத்தகைய நம்பிக்கையை மக்கள் உங்கள் மீது வைத்திருக்கிறார்கள் என்பதை மனதில் வைத்து நீங்கள் செயல்படுங்கள்.

உங்களுக்கு கிடைத்துள்ள இந்த வாய்ப்பை தயவுகூர்ந்து நீங்கள் வீணாக்கிவிடக்கூடாது.

மக்களது நம்பிக்கையை நாள்தோறும் பெறுவதன் வழியாக, இந்த வாய்ப்பை தக்கவைத்துக் கொள்ளுங்கள்!

மக்களாட்சி தத்துவத்திலும், அதன் நெறிமுறைகளிலும் நமது அரசு எப்போதும் நம்பிக்கை கொண்டுள்ளது. எப்போதெல்லாம் மக்களாட்சி தத்துவத்திற்கு ஊறு விளைகிறதோ, அப்போதெல்லாம் கழக ஆட்சி அதை சரிசெய்யும் அமைப்பாக திகழ்ந்து இருக்கிறது. இதுதான் நம்முடைய இயக்கத்தினுடைய வரலாறு.

உள்ளாட்சித் தேர்தலை முறையாக - சரியாக - குறிப்பிட்ட காலத்துக்குள் நடத்துவது தான் மக்களாட்சித் தத்துவத்தின் அடிப்படை! அதில் எப்போதும் உறுதியாக இருப்பதுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை முதலில் நீங்கள் புரிந்து கொண்டாக வேண்டும்!

இந்திய அரசமைப்பு 74-ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் முதலாவது உள்ளாட்சித் தேர்தல் 1996-ஆம் ஆண்டு நடத்தப்பட்டது.

அதன்பிறகு 2001, 2006, 2011 ஆகிய ஆண்டுகளில், குறிப்பிட்ட கால இடைவெளியில் நடத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, 2016-ஆம் ஆண்டு தேர்தல் நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் நடத்தப்படவில்லை. இப்போது எந்தவிதமான முறைகேடுகளுக்கும், கிஞ்சிற்றும் இடம் கொடுக்காமல், தேர்தல் நடத்தப்பட்டு முடிவடைந்திருக்கிறது.

21 மாநகராட்சிகள் - 138 நகராட்சிகள் - 489 பேரூராட்சிகளுக்கு தேர்தல் நடந்துள்ளது.

1373 மாநகராட்சி உறுப்பினர்களும் - 3842 நகராட்சி உறுப்பினர்களும் - 7604 பேரூராட்சி உறுப்பினர்களும் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

மறைமுகத் தேர்தல் மூலமாக 21 மேயர்கள் - 21 துணை மேயர்கள் - 138 நகராட்சித் தலைவர்கள் - 136 நகராட்சித் துணைத் தலைவர்கள் - முறையே 487 பேரூராட்சித் தலைவர்கள் - 483 பேரூராட்சித் துணைத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

இப்படி மக்களால் நேரடியாகவும், மறைமுகமாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உள்ளாட்சிப் பிரதிநிதிகள் அனைவர்க்கும் நான் இந்த நேரத்திலே எனது பாராட்டுதலையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களது சிறப்பான செயல்பாடுகள் தமிழ்நாட்டு மக்களுக்கு பயன்பட வேண்டும் - தமிழக அரசுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று உங்களை நான் உரிமையோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

தற்போது புதிதாக பதவி ஏற்றுள்ள பெரும்பான்மையான மேயர்கள் மற்றும் துணை மேயர்கள், நகர்மன்ற தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள் இளம் வயதினராக இருக்கிறீர்கள்.

முதன் முதலாக உள்ளாட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கிறீர்கள்.

புதியவராகவும் தேர்வுசெய்யப்பட்டு வந்துள்ளீர்கள்.

உங்கள் கைகளில் உள்ளாட்சிகளின் எதிர்காலம் அடங்கி இருக்கிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் இதை தங்களுக்கு கிடைத்த பதவி என்று நினைக்காமல், பொறுப்பாக நினைக்க வேண்டும்.

நான் பல நேரங்களில், பல இடங்களில் இதைப்பற்றி அடிக்கடி எடுத்து சொல்வதுண்டு.

நான் 1996 - ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியின் மேயராக, முதன்முதலில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர் யாரென்று கேட்டால் அது நான்தான். மேயர் என்றால், அது எப்படிப்பட்ட பொறுப்பு என்றால், வணக்கத்திற்குரிய மேயர். அப்போது எல்லாம் ஒரு வருடம் தான் மேயருடைய பதவிகாலம். அந்த ஒரு வருடத்தில் அவர் பதவியேற்றதற்கான பாராட்டு விழாவே மூன்று மாதங்கள் போய்விடும், ஆங்காங்கே இருக்கக்கூடிய சங்கங்கள் மூலமாக வரவேற்பு கொடுக்கின்ற நிகழ்ச்சிகள் அது மூன்று மாதங்கள் போய்விடும், அதற்குபிறகு பல மாநிலங்களுக்கு, பல வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம், அது ஒரு ஆறு மாதங்கள் போய்விடும். ஒரு பெரிய Chevrolet கார், ஒரு பெரிய அங்கி, 100 பவுன் செயின், ஒரு செங்கோல், இதுதான். பதவியேற்றுக் கொள்வார், பதவி முடிந்துவிடும்.

முக்கியமான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது தான் மேயருடைய பணியாக இருந்தது.

ஆனால் 1996-ஆம் ஆண்டு நான் மேயராக பொறுப்பேற்றதற்கு பிறகு அது அப்படியே மாற்றிவிட்டேன். ஆக, மக்களோடு மக்களாக இருந்தால் தான், நமக்கு பெருமை. நாம் சார்ந்திருக்கக்கூடிய இயக்கத்திற்கு சிறப்பு. அதுதான் உண்மையான மக்களாட்சியாகஇருந்திட முடியும் என்ற நிலையிலே அந்த பொறுப்பை ஏற்றுக் கொண்டு நான் பணியாற்றினேன் என்பது உங்கள் அத்தனை பேருக்கும் தெரியும். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் இதை தங்களுக்கு கிடைத்த பதவியாக நினைக்கக்கூடாது, பொறுப்பாக நினைக்க வேண்டும்.

இன்னும் கூட ஒன்றை சொல்ல விரும்புகிறேன். நான் 1996-ஆம் ஆண்டு மேயராக பொறுப்பேற்று, மாநகராட்சி கூட்டத்தில் போய் என்னுடைய முதல் கன்னிப் பேச்சு மேயராக பொறுப்பேற்று. அதைதான் தயாரித்து, அது சரியாக இருக்கிறதா என்று நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களிடத்திலே முதல்வராக இருந்த கலைஞர் அவர்களிடத்தில் காண்பித்தேன். அதை படித்துப் பார்த்து நன்றாக இருக்கிறது, இரண்டே இரண்டு திருத்தங்கள் இருக்கிறது என்று கூறினார். என்ன திருத்தம் என்று கேட்டால், மேயர் பதவி என்று போட்டு இருப்பேன், அந்த பதவி என்ற வார்த்தையை அடித்துவிட்டு, பொறுப்பு என்று மாற்றினார். அதற்குப்பிறகு எதற்காக இதை மாற்றினேன் தெரியுமா என்று என்னை பார்த்து கேட்டார். எதற்கு என்று கேட்டேன், மக்கள் கொடுத்திருப்பது மேயர் பதவியல்ல, மேயர் பொறுப்பு. ஆகவே பொறுப்போடு இருந்து, நீ பொறுப்போடு பணியாற்றினால் தான் அது மக்களுக்கு போய் சேரும் என்று எடுத்துச் சொன்னார். அதைத்தான் உங்களுக்கு நான் இங்கே நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

இன்றைக்கு நீங்கள் பொறுப்பிற்கு வந்திருக்கிறீர்கள் என்றால், அதை பதவியாக நினைக்காமல், பொறுப்பாக நினைத்தீர்கள் என்றால், பொறுப்போடு உங்களால் பணியாற்ற முடியும் என்பதை இந்த நேரத்தில் தான் உறுதியிட்டு தெரிவிக்க விரும்புகிறேன்.

எப்படிச் செயல்பட வேண்டும் என்பது குறித்து சிறந்த முறையிலே அனுபவம் பெற்றிருக்கக்கூடிய நம்முடைய நேருவாக இருந்தாலும், சேகர்பாபு-வாக இருந்தாலும், மா.சுப்பிரமணியனாக இருந்தாலும், அதைப்போல சில குறிப்பிட்ட சில அதிகாரிகளும், இங்கே பயிற்சி தரக்கூடிய அளவிலே சில கருத்துகளை எல்லாம் எடுத்துரைக்கிறார்கள், அதை நீங்கள் உள்வாங்கி இருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். எப்படி செயல்பட வேண்டுமென்பது குறித்து பயிற்சி அளிக்க மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என். நேரு அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார்கள். பயிற்சி அளிக்க வேண்டும் என்று முடிவெடுத்து அந்த பயிற்சியை உடனடியாக நடத்திய அவருடைய சிந்தனையையும், வேகத்தையும் நான் பாராட்டுகிறேன்.

ஆட்சி அமைந்துவிட்டது. அமைச்சர்கள் பட்டியல் தயாரித்து கொண்டு இருக்கிறோம். அப்போது நகராட்சி துறைக்கு நேரு அவர்களை தான் தேர்ந்தெடுத்தேன். ஏன் என்றால் அவர் எல்லாவற்றிலும் வேகமாக இருப்பார். மேடையிலே பார்த்திருப்பீர்கள். அதனால் தான் அவரை தேர்ந்தெடுத்து, இத்துறைக்கு அமைச்சராக நியமித்து இருக்கிறோம். அதைப்போல பயிற்சியையும் உங்களுக்கு அளிக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு நடத்திக் கொண்டு இருக்கிறார்.

அவரே உள்ளாட்சிப் பிரதிநிதியாக அரசியல் களத்தில் காலடி வைத்தவர்தான். புள்ளம்பாடி ஊராட்சி தலைவராக. அங்கிருந்து தான் அவரது அரசியல் அடிச்சுவடி ஆரம்பம் ஆனது.

என்னுடைய அரசியல் அடிச்சுவடி கூட மேயர், அதே உள்ளாட்சி அமைப்பு தான். எனவே, எங்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியத்துவம் என்பது நன்றாகத் தெரியும்.

மக்களுக்கு மிகச்சிறிய நன்மையைச் செய்தாலும், அது பெரிய பேரை வாங்கித் தரும்.

சிறிய தவறு செய்தாலும், அதுவும் பெயரை கெடுத்துவிடும்! அதை மறந்துவிடாதீர்கள்.

எனவேதான் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் தங்களது ஒவ்வொரு அடியையும் கவனத்தோடு வைக்க வேண்டும்.

உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகமும் மாமன்ற நடவடிக்கைகளும் சிறந்து விளங்கிட மாநகராட்சிகளின் சட்டங்களையும், விதிமுறைகளையும் மாண்புமிகு மேயர்கள் அறிந்திருப்பது அவசியம்.

மாமன்றத்தின் நடைமுறைகள் குறித்தான சட்ட விதிகள், நிர்வாக வழிமுறைகள், கணக்கு முறைகள், நிதி நிர்வாகம் போன்ற அனைத்தும் அறிந்தவர்களாக நீங்கள் உங்களை தகுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

விதிமுறைப் புத்தகத்தை தொடர்ந்து அவ்வப்போது நீங்கள் படிக்க வேண்டும்.

அதில் இருக்கின்ற முக்கியமானதை குறிப்பு எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

விதிமீறல் என்பது எங்கும் எப்போதும் எந்தச் சூழலிலும் வந்துவிடாமல் கவனமாக இருக்க வேண்டும்.

* நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களை தற்சார்புடைய நிறுவனங்களாக முன்னேற்றுவது அரசின் மிக முக்கிய நோக்கம்.

* மக்களுக்கு தேவைப்படுகின்ற அனைத்து விதமான அடிப்படை வசதிகளையும், சேவைகளையும் பல்வேறு வழிகளில் நகராட்சி நிர்வாகம் திறம்பட செயல்படுத்தி கொண்டு இருக்கிறது.

* நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகளான பாதாள சாக்கடை, மழைநீர் வடிகால் அமைப்புகள், மேம்படுத்தப்பட்ட சாலைகள், பேருந்து நிறுத்தங்கள், போதிய மற்றும் தரமான குடிநீர், திடக்கழிவு மேலாண்மை, குடிசை பகுதிகளை மேம்படுத்துதல், நகர்ப்புற ஏழைகள் வாழ்வதற்கு வீடுகளை கட்டிக் கொடுத்தல், சாலையோர வியாபாரிகளின் நலன் காத்தல், வீடு இல்லாதவர்களுக்கு புகலிடம் அமைத்து பராமரித்தல் மற்றும் தனி நபர் மற்றும் சமுதாய கழிப்பிடம் அமைத்தல் போன்றவையுடன் இன்னும் பலவிதமான சேவைகளை நகராட்சி நிர்வாகத்துறை மேற்கொண்டு வருகிறது.

இவை அனைத்தும் மக்களுக்கு சரியாகத் தரப்பட்டுள்ளதா என்பதை கண்காணிக்கவேண்டிய மிகப்பெரிய பொறுப்பு உங்கள் கையில் இருக்கிறது.

தமிழகத்தின் நிதி நிலைமை பற்றி உங்களுக்குத் தெரியும். எவ்வளவு கடனில் இருக்கிறோம், எவ்வளவு வட்டி கட்டிக் கொண்டு இருக்கிறோம். இது எல்லாம் அவ்வப்போது அரசின் சார்பில், நிதித்துறையின் சார்பில் சட்டமன்றத்தில் பேசப்பட்டு கொண்டு இருப்பது எல்லாம் உங்களுக்கு தெரிந்திருக்கக்கூடிய வாய்ப்பு உண்டு.

எனவே, நிதிநிலைமைக்கு ஏற்றவாறுதான் அரசின் சார்பில் ஒதுக்கீடு செய்ய முடியும்.

அப்படி ஒதுக்கீடு செய்யும் நிதி முறையாகச் செலவு செய்யப்பட வேண்டும்.

அதனை நீங்கள் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாடு, இந்தியாவிலேயே பெரிய மாநிலங்களில் அதிக நகர்ப்புற மக்கள் தொகை (48 விழுக்காடு) கொண்ட மாநிலம்.

நகர்ப்புறங்களில் அதிகரித்து வரக்கூடிய மக்கள்தொகைக்கு ஏற்றவாறு நாம் திட்டங்களை வகுத்தாக வேண்டும்.

அனைத்து மக்களுக்கும் சீரான, நீடித்த, நிலையான வளர்ச்சியை ஏற்படுத்திக் கொடுப்பதே இத்துறையின் முக்கிய குறிக்கோள்.

மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்திடவும், சுற்றுப்புறச்சூழலை தூய்மையாக பேணவும், நகர்ப்புற கட்டமைப்பை மேம்படுத்திடவும், நேர்மையான நிர்வாகம் அமைந்திட மாநகராட்சி சட்ட விதிகளுக்குட்பட்டு தீர்மானங்களை நிறைவேற்றி நல்லமுறையில் செயல்படுத்தி அமைந்திருக்கக்கூடிய தமிழக அரசிற்கு நற்பெயர் பெற்றுத் தர வேண்டுகிறேன்.

* தரமான குடிநீர் வசதி -

* தெருவிளக்குகள் அமைத்தல்,

* சாலைகள் மேம்படுத்துதல்,

* பாதாள சாக்கடை திட்டப்பணிகள்,

* மழைநீர் சேகரிப்பு அமைப்பு அமைத்தல்

* பொதுசுகாதாரம் சார்ந்த திடக்கழிவு மேலாண்மை - ஆகியவற்றுக்கு அதிகமான முக்கியத்துவம் தாருங்கள்.

‘மக்கள் சேவையில் மாநகராட்சி’

‘நமது சேவையில் நகராட்சி’ - என்பதுதான் நம்முடைய இலக்காக இருக்க வேண்டும்!

இதனைச் நீங்கள் செயல்படுத்திக் காட்டுங்கள். செயல்படுத்திக் காட்டுவீர்கள் என்று நான் நம்புகிறேன். அந்த நம்பிக்கையை நீங்கள் காப்பாற்றித் தர வேண்டும்.

மாநகராட்சி சட்டங்களில் வார்டு குழுக்களுக்கான பொறுப்புகளும் அதிகாரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

மாநகராட்சியின் நிர்வாகத்தில் மாமன்றத்திற்கு உதவிட கணக்கு குழு, கல்வி குழு, பொது சுகாதார குழு, வரி விதிப்பு மற்றும் நிதி குழு, நகரமைப்பு குழு மற்றும் பணிக்குழு ஆகிய நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இத்தகைய ஏற்பாட்டின்படி மாநகராட்சி அமைப்பிற்கும் உள்ளூர் மக்களுக்கும் இடையேயான தொடர்பின் இடைவெளி குறைந்துள்ளது. வார்டு குழுக்கள் அடிமட்ட அளவில் செயல்படுவதால் மக்களின் குறைகளை உடனுக்குடன் களைய வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேயர்கள், மாமன்ற கூட்டங்களை காலமுறைப்படி கூட்ட வேண்டும்.

சட்டப்படியாக நிறைவேற்றப்பட வரவேண்டிய கடமைகளை நிறைவேற்றியும் அதிகாரங்களை முறையாக செலுத்துதல் வேண்டும்.

மாமன்றங்களின் தீர்மானங்களின் செயல்பாட்டை ஆய்வு செய்தல் வேண்டும்.

அனைத்துப் பகுதிகளிலும் அடிப்படை வசதிகள் நல்ல முறையில் உள்ளதா என்பதையும், தூய்மையான முறையில் அனைத்துப் பகுதிகளும் பராமரிக்கப்படுகிறதா என்பதையும் நாள்தோறும் நீங்கள் ஆய்வு செய்திட வேண்டும்.

மக்களுடைய கோரிக்கைகளைக் கேட்டறிந்து உடனுக்குடன் அவற்றை சரிசெய்திட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அரசின் நலத்திட்டங்களை உடனுக்குடன் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

அதாவது, உள்ளாட்சி அமைப்புகளுக்கு பிரதிநிதிகள் இல்லாத காரணத்தினால் தான், எம்.எல்.ஏ.க்களை தேடிப் போகக் கூடிய, எம்.பி.க்களை தேடிப் போகக்கூடிய, அமைச்சர்களை தேடிப் போக வேண்டிய ஒரு சூழல். இன்னும் சுருக்கமாக, விளக்கமாக உங்களுக்கு சொல்ல வேண்டும் என்றால், மக்களோடு அதிகமாக தொடர்பு வைத்துக் கொள்வது கவுன்சிலர்கள் தான். ஒரு இயக்கத்திற்கு பெருமை சேர்ப்பதும் அதற்கும் காரணம் நீங்கள் தான், கெட்ட பேர் வருவதற்கும் காரணம் நீங்கள் தான் என்று இருக்கக்கூடாது. நல்ல பெயரை எடுத்தாக வேண்டும்.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டும் என்றால், கோபாலபுரம் பகுதி, ஆயிரம் விளக்கு தொகுதியில் இருக்கிறது. தலைவருடைய வீடு இருக்கும் பகுதி. அங்கே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்த கவுன்சிலர் திரு. ஜேசுதாஸ் என்பவர் 1967 - 68ஆம் ஆண்டுகளில் இருந்தார். அவருக்கு அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய எல்லோரும் வாக்களித்துவிடுவார்கள். ஆனால் அதே தொகுதிக்குட்பட்டு இருக்கக்கூடிய ஆயிரம் விளக்கு தொகுதியில் நான் நிற்கிறேன், முரசொலி மாறன் அவர்கள் நிற்கிறார், வாக்களிக்க மாட்டார்கள். குடும்ப டாக்டராக இருக்கக்கூடிய கிருஷ்ணன் அவர்கள் வெளிப்படையாக சொன்னார், கவுன்சிலருக்கு வாக்களித்தேன், உங்களுக்கு எல்லாம் வாக்களிக்கவில்லை என்றார். ஏன் என்றால் கவுன்சிலர் காலை 5 மணிக்கு சைக்கிள் எடுத்துக் கொண்டு தெருத்தெருவாக சென்று தண்ணீர் வருகிறதா, தெருவிளக்கு எரிகிறதா, அப்படி என்று தொடர்ந்து பார்த்துக் கொண்டு இருக்கிறார். அதனால் தான் கவுன்சிலர்கள் மக்களுடைய மனதில் ஆழமாக பதியக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. அதனால் தான் நீங்கள் மக்களோடு மக்களாக இருக்க வேண்டும் என்று தொடர்ந்து கூறிக் கொண்டு இருக்கிறேன். மக்களுடைய கோரிக்கைகளை கேட்டு, அதை உடனுக்குடன் சரிசெய்கிற நடவடிக்கை எடுத்தாக வேண்டும். அரசினுடைய நலத்திட்டங்களை மக்களுக்கு உடனுக்குடன் மக்களிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும். என்னதான் நாங்கள் திட்டங்களை

தீட்டினாலும், பெரிய பெரிய சாதனைகளை படைத்தாலும் அதை மக்களுக்கு போய் சேர்க்கக்கூடிய பணி யாரிடத்தில் இருக்கிறது என்றால் அது உங்களிடத்திலே தான் இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

நகர்ப்புற சேவைகளை மக்கள் அறியும் வண்ணம் வழிவகைகளை ஏற்படுத்திட வேண்டும்.

மாநகராட்சி சேவைகள் மக்களை எளிதில் சென்றடைய தேவையான தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்தி வழங்கிட வழிவகை செய்ய வேண்டும். மக்களுக்கு முறையான விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும்.

தமிழகம் தொடர்ந்து உள்ளாட்சி நிர்வாகத்தில் நல்லாட்சி செய்திட முழுமையான ஈடுபாட்டோடு செம்மையான நிர்வாகத்தை மக்களுக்குக் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

தங்களுக்கான பொறுப்புகளையும் கடமைகளையும் நன்கு அறிந்துகொண்டு தாங்கள் சார்ந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பெருமை சேர்த்து தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்க்கும் வகையில் செயலாற்றிட உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அனைவருக்குமான வளர்ச்சி என்ற ‘திராவிட மாடல்’ ஆட்சியை நாங்கள் நடத்த விரும்புகிறோம்.

ஒருகாலம் இருந்தது, 50 சதவிகிதம் பெண்களுக்கு இடஒதுக்கீடு கிடைத்துள்ளது என்று பெருமையோடு சொன்னார்கள். இன்னார் படித்தால் போதும், இன்னார் வேலைக்கு போனால் போதும், இன்னார் பதவிக்கு வந்தால் போதும், இன்னார் அதிகாரத்துக்கு வந்தால் போதும், இன்னார் வீதியில் நடந்தால் போதும், இன்னார் கோவிலுக்குள் வந்தால் போதும், பெண்களுக்கு படிப்பு வேண்டாம், பெண்ணுக்கு வேலை வேண்டாம், பெண் வீட்டை விட்டு வெளியில் வரக் கூடாது என்றெல்லாம் ஒருகாலத்தில் இருந்தது.

அதனை மாற்றி எல்லார்க்கும் எல்லாம் என்பதை உருவாக்கிய இயக்கம் தான் நம்முடைய திராவிட இயக்கம். அதனை சட்டபூர்வமாக ஆக்கிய ஆட்சி திராவிட இயக்கத்தின் ஆட்சி.

அனைத்தையும் சமூக ஜனநாயகப்படுத்திய இயக்கம் திராவிட இயக்கம்.

அனைத்து துறைகளிலும் வளர்ச்சி -

அனைத்து சமூகத்தின் வளர்ச்சி -

அனைத்து மாவட்டங்களுக்குமான வளர்ச்சி என்ற திராவிட மாடல் ஆட்சிக்கு உங்களது செயல்பாடுகள் உறுதுணையாக இருக்க வேண்டும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரநிதிகளும், அரசு அதிகாரிகளும் ஒன்றிணைந்து ஓர் அணியாக செயல்பட்டு மக்களுக்கான பணிகளை செய்திட வேண்டும்.

உங்களை நம்பி நாங்கள் எங்களது திட்டங்களை ஒப்படைத்திருக்கிறோம். அதை மறந்துவிடாதீர்கள்.

ஒரு வேண்டுகோளை எடுத்துக் வைக்க விரும்புகிறேன். மேயர்களுக்கு மட்டுமல்ல அரசு அதிகாரிகளுக்கும் ஒரு வேண்டுகோளாக இதை வைக்க விரும்புகிறேன். நான் மேயராக இருந்த போது சென்னை மாநகரத்தில் 10 மேம்பாலங்கள் கட்டினோம். இதுவரை மாநகராட்சி சார்பில் பாலம் கட்டிய வரலாறு கிடையாது. அரசின் சார்பில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில், பொதுப்பணித் துறை சார்பில், மத்திய அரசின் மூலமாக அல்லது மாநில அரசின் மூலமாக தான் பாலங்கள் கட்டுகின்ற பணி நடக்கும். முதன்முதலில் 1996ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியில் 10 மேம்பாலங்களை கட்டிய மேயராக நான் தான்.

அரசுப் பணி என்றால் காலதாமதாக தான் நடக்கும். அது ஒரு வழக்கமாக இருந்தது. அதை முறியடிக்க வேண்டும் என்று முடிவு செய்து, ஒரு வருடத்தில் முடிக்க வேண்டிய பணியை பத்தே மாதத்தில் நாங்கள் முடித்தோம். இன்னும் சொல்ல வேண்டும் என்றால், மதிப்பீடு போடுவோம். அப்பணி முடிகிற நேரத்தில் மதிப்பீடு எப்படி போட்டோமோ அதைவிட அதிகமாகதான் முடியும். 10 பாலங்களை கட்ட நாங்கள் போட்ட மதிப்பீட்டில் 30 கோடி ரூபாய் குறைவாக முடித்து, அதை மாநகராட்சியின் கஜானாவில் சேர்த்தோம். அதுமிகப் பெரிய சாதனை. மாநகராட்சியில் இருக்கக்கூடிய நிர்வாகிகளை கேட்டுக் கொள்கிறேன். ஒரு கூட்டுக் குழு (Joint Committee)

போடுங்கள். ஒரு பாலம் கட்டுகிறோம் என்றால், அதற்கு பள்ளம் தோண்டும் போது டெலிபோன் கேபிள் போகும், ரோடு போட வேண்டும் என்றால் மழைநீர் கால்வாய் இருக்கும், கழிவு நீர் கால்வாய் இருக்கும். இப்படி பல குழாய்கள் இருக்கும், அதற்கு எல்லாம் பாதிப்பு வரும். அதனால் பணிகள் கொஞ்சம் தாமதமாகும். அதனால் ரெயில்வே துறையாக இருந்தாலும், தொலைபேசி துறையாக இருந்தாலும், பொதுப்பணித் துறையாக இருந்தாலும், போக்குவரத்து துறையாக இருந்தாலும், அந்தந்த துறைகளின் அதிகாரிகளை கொண்டு கூட்டுக் குழு அமைத்து, அந்த பாலம் கட்டி முடிக்கும் வரை, வாரத்திற்கு ஒருமுறை அல்லது 15 நாட்களுக்கு ஒருமுறை கூட்டத்தை கூட்டி, என்னென்ன பிரச்சனைகள் என்று பேசி தீர்த்து கொண்டீர்கள் என்றால், உடனடியாக நினைத்த நேரத்தில் அப்பணியை செய்து முடிக்க முடியும். ஆகவே, அதையும் பின்பற்ற வேண்டும் என்று உங்களை எல்லாம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே இந்த அரசுக்கும் நற்பெயரை பெற்றுத்தரக்கூடிய சூழலை நீங்கள் உருவாக்கி தர வேண்டும்.

நான் மேயராக பொறுப்பேற்ற போது, சென்னையில் தொடர்ந்து 15-20 நாட்கள் மழை பெய்து கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் தண்ணீர் தேங்கி நின்றது. முதல்வர் அவர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்க்க வேண்டும், நிவாரண பணிகளை முடுக்கி விட வேண்டும் என்று முதலமைச்சர் அலுவலகத்தில் இருந்து செய்தி வந்தது. அவரை அழைத்துக் கொண்டு, சென்னை மாநகரம் முழுவதும் சுற்றிசுற்றி வந்து கொண்டு இருக்கிறோம். அப்போது முதல்வர் அவர்கள் வேடிக்கையாக சொன்னார்கள். ஸ்டாலின் மேயராக வந்தபிறகு மழை பெய்து கொண்டே இருக்கிறது. அது எல்லாம் இப்போது எனக்கு நினைவுக்கு வருகிறது. அந்த அனுபவம் தான் இப்போது நாம் ஆட்சிக்கு வந்த பிறகு, கொரோனா, அதைவிட கொடுமை எங்கு பார்த்தாலும் மழை பெய்து தண்ணீர் வரலாற்றில் இல்லாத அளவிற்கு மழை பெய்த்து தண்ணீர் நிற்கிறது. அப்போது இந்த மாநகராட்சிக்கு யார் ஆணையராக இருந்தால் பொருத்தமாக இருக்கும், யாரை ஆணையராக நியமிக்க வேண்டும் என்று அதிகாரிகளை எல்லாம் கலந்து பேசியபோது, திரு. ககன்சிங் பேடி அவர்களை தான் நியமிக்க வேண்டும் என்று

சொன்னார்கள். அவர் பொறுப்பு எடுத்துக் கொண்ட பிறகு தான் மாநகராட்சியில் மிகச் சிறப்பான பணிகள் நடந்து கொண்டு இருப்பதை நான் கண்கூடாக பார்க்கிறேன். நேரு அவர்களை இந்த துறைக்கு அமைச்சராக நியமித்தவுடனே இந்த துறைக்கு யாரை செயலாளராக நியமிக்க வேண்டும் என்று ஆலோசித்த போது என்னுடைய நினைவிற்கு வந்தது திரு. சிவ்தாஸ் மீனா அவர்கள் தான். அப்போது அவர் சென்னையில் இல்லை, தில்லியில் பணியாற்றி கொண்டு இருந்தார். அவரிடத்திலே தகவல் அனுப்பினோம். நீங்கள் சொன்னால் வந்து விடுகிறேன் என்றார். சொன்னால் அல்ல, உடனே வாருங்கள் என்று சொல்லி அழைத்து இத்துறைக்கு செயலாளராக நியமித்தோம். ஏன் இதை நான் சொல்கிறேன் என்றால், பணிகளை வேகப்படுத்த வேண்டும், விரைவுபடுத்த வேண்டும், மக்களுக்கு போய் சேரவேண்டும் என்பதற்காகத் தான் இந்த முயற்சியிலே நாங்கள் ஈடுபட்டோம். எனவே நிச்சயமாக, உறுதியாக ஆட்சிக்கு வந்து இந்த 11 மாத காலம், அடுத்த மாதம் 7ஆம் தேதி வந்தால் ஒரு வருடம் ஆகப் போகிறது. இதற்கிடையிலே ஏற்கனவே ஊரகப் பகுதியில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல், நகராட்சிப் பகுதிகளில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல்களில் மிகப் பெரிய வெற்றியை பெற்றிருக்கிறோம் என்றால் இந்த ஆட்சியினுடைய சாதனைகள் மக்களைப் போய் சேர்ந்திருக்கிறது, மக்கள் நம் ஆட்சியின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆக அந்த நம்பிக்கைக்கு வலுசேர்க்க கூடிய அளவில் உங்கள் பணி அமைந்திருக்க வேண்டும் அதற்கு பணியாற்ற உறுதி எடுத்துக் கொள்ளக்கூடிய வகையிலே இந்த பயிற்சி பாசறைக் கூட்டம் பயன்பெற வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டு, உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன்,

நன்றி வணக்கம்!

***

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in